DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

Spl.C.C.No. 08/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.10

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. மாரியம்மாள் | Caste | : |
| Husband's Name | : ரவி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 23rd day of June, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது வெம்பக்கோட்டை தாலுகாவில் உள்ள கோட்டைப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் 2012 ம் ஆண்டு எனது கணவர் ரவியுடன் ஈரோட்டில் குடியிருந்து வந்தேன். எனக்கு சொந்த ஊர் நல்லமநாயக்கன்பட்டி இல்லை. ஆனால் நல்லமநாயக்கன்பட்டியில் வீடு கட்டுவதற்காக மனை வாங்கினேன். எனது தங்கையின் கணவரிடம் சொல்லி அந்த இடத்தினை வாங்கினேன். அதனைத்தொடர்ந்து நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சியில் பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு கட்டலாம் என்று சொல்லி எனது தங்கையின் கணவர் ஜெயசீலன் சொன்னார். எனது கணவர் எனது தங்கையின் கணவருடன் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று பஞ்சாயத்து தலைவரான ஆஜர் எதிரி தங்கம் அவர்களை சந்தித்து கேட்டபோது அவர் சரி என்று சொல்லி வீட்டிற்கான வேலை உத்தரவு வழங்குவதற்காக ரூ. 15 ஆயிரம் பஞ்சாயத்து செலவிற்கு தேவை என்று சொல்லி எங்களிடம் கேட்பதாக எனது கணவர் என்னிடம் சொன்னார். நான் எனது நகையை அடமானம் வைத்து ரூ. 15

ஆயிரத்தை எனது கணவர் மூலமாக பஞ்சாயத்து தலைவரான ஆஜர் எதிரியிடம் கொடுத்தோம். அதனைத்தொடர்ந்து என்னுடன் 8 நபர்கள் பசுமை வீடு திட்டத்தின் கீழ் பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனக்கு வேலை உத்தரவு எனது பெயரில் வழங்கப்பட்டது. நாங்கள் வீடு கட்டுவதற்காக அடித்தளம் அமைத்தோம். அதற்கு எந்த பணமும் பஞ்சாயத்திலிருந்து நாங்கள் வாங்கவில்லை. மேலும் கட்டுமானத்திற்கு பணம் வரும் என்று சொன்னார்கள். எனது கணவர் பஞ்சாயத்து அலுவலகத்தில் கேட்டபோது உங்களுக்கான வேலை உத்தரவு ரத்தாகிவிட்டது என்று தெரிவித்தார்கள். நாங்கள் எதிரிக்கு கொடுத்த ரூ. 15 ஆயிரத்தை திருப்பி கேட்டபோது பஞ்சாயத்து வேலைக்கு செலவாகிவிட்டது என்று சொன்னார்கள். அதைத்தொடர்ந்து எனக்கு பதிலாக நல்லமநாயக்கன்பட்டி ஊரைச்சேர்ந்த மாரியம்மாள் என்பவர் பயனாளியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். என்னுடன் 3 பயனாளிகளுக்கு உத்தரவு ரத்து செய்யப்பட்டது. நான் எனது பணத்தினை திரும்ப பெறவில்லை. இதுசம்பந்தமாக விருதுநகர் ஊ.த.க.பிரிவு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நான் எனது முதல் விசாரணையில் சொன்னதுபோல் என் உறவினர்களிடம் எதிரி பணம் எதுவும் கேட்கவில்லை என்றும், அவ்வாறு கேட்டதாக என் உறவினர்கள் என்னிடம் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதன்பேரில் நான் நகையை அடகு வைத்து பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கு நானோ எனது உறவினர்களோ லஞ்சமாக பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டு எங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி உத்தரவு ரத்தாகிவிட்டதால் எதிரியிடம் பணம் கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி அந்த பணம் செலவாகிவிட்டதாக சொன்னார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. விருதுநகர் ஊ.த.க.பிரிவு அலுவலகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையில் பொய்யாக சாட்சியம்

அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்தாகிவிட்ட வருத்தத்தின் காரணமாக எதிரி தான் காரணம் என்று கருதி எதிரிக்கு பணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி பணம் கேட்ட தேதி குறித்து ஆய்வாளரிடம் குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி, மாதம், வருடம் ஆகியவற்றை நான் காவல் ஆய்வாளர் விசாரணையில் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் நகையை யாரிடம் அடகு வைத்ததாக பெயர் குறித்து ஆய்வாளர் என்னிடம் விசாரித்தாரா என்றால் ஞாபகம் இல்லை. நான் நகையை மேட்டுப்பட்டியில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் எனது அக்காவின் வங்கிக்கணக்கில் அடகு வைத்தேன். எனது அக்காவின் பெயர் வீரலட்சுமி ஆகும். நகையின் எடை எவ்வளவு என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வீடு கட்டுவதற்கான உத்தரவு வழங்கப்பட்ட பின்புதான் நகையை அடமானம் வைத்தேன். எவ்வளவு நாட்கள் கழித்து நகையை அடமானம் வைத்தேன் என்று ஞாபகம் இல்லை. ஊ.த.க.பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்து சுமார் 4 அல்லது 5 வருடங்கள் கழித்து நான் நகையை மீட்டுவிட்டேன். வீடு கட்டுவதற்காக அனுமதி உத்தரவினை ரத்து செய்த பிறகு எத்தனை நாட்கள் கழித்து ஆய்வாளர் விசாரித்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி பணத்தை திரும்ப கொடுக்கவில்லை என்பது குறித்து ஆய்வாளர் விசாரிப்பதற்கு முன்பாக எதிரியின் மேல் அதிகாரிகளுக்கு நானோ எனது கணவரோ புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

Spl.C.C.No. 08/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.11

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ஜெயசீலன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 23rd day of June, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது நல்லமநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். 2012 ம் ஆண்டிலும் நான் மேற்படி கிராமத்தில் தான் இருந்துவந்தேன். எனது சொந்த ஊர் நல்லமநாயக்கன்பட்டி தான். அசா 10 மாரியம்மாள் எனது மனைவியின் சகோதரி ஆவார். அசா 10 அவரது கணவருடன் 2012ம் ஆண்டு ஈரோட்டில் வசித்து வந்தார். அவருக்கு சொந்த ஊர் நல்லமநாயக்கன்பட்டி கிடையாது. எனது மனைவியின் சகோதரி குடும்பம் என்பதால் நான் நல்லமநாயக்கன்பட்டியில் வீட்டு மனை வாங்கும்போது அவர்களுக்கும் சேர்த்து வாங்கிக்கொடுத்தேன். மேற்படி மனையில் வீடு கட்டுவதற்காக பேச்சு எழுந்தபோது பஞ்சாயத்தில் பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு கட்ட பணம் தருவதாக கேள்விப்பட்டு நான் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று அங்கு ஆஜர் எதிரி தங்கத்தை பார்த்து அது சம்பந்தமாக விசாரித்தேன். எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனக்கு நன்கு பழக்கம் ஆனவர். அவர் வீட்டு மனைக்குரிய ஆவணங்களை கேட்டு பெற்று அதனையும் இடத்தினையும் வந்து பார்த்தார். அதைத்தொடர்ந்து நான்

அசா 10 ன் கணவர் ரவிக்கு தகவல் சொன்னேன். அவர்களும் எங்களுக்கு பசுமை வீடு திட்டத்தில் வீடு கட்ட ஏற்பாடு செய்ய சொன்னார்கள். நானும் அசா 10 ன் கணவர் ரவியும் ஆஜர் எதிரியை அவரது அலுவலகத்தில் சென்று பார்த்தபோது ரெடி செய்துவிடலாம் என்று சொல்லி அத்துடன் பஞ்சாயத்திற்கு பணம் கட்டவேண்டியது இருக்கும் என்று சொல்லி ரூ.15 ஆயிரம் ஆகும் என்று சொல்லி என்னிடம் சொன்னார். அசா 10 ன் கணவர் மேற்படி விபரத்தினை அசா 10 மாரியம்மாளிடம் சொன்னபோது அசா 10 தற்போது எங்களிடம் பணம் இல்லை. ஒரு வாரம் கழித்து சொல்கிறோம் என்று கூறினார். ஒரு வாரம் கழித்து அசா 10 நகையை வேண்டும் என்றால் அடகு வைத்து பணம் கொடுக்கிறோம் என்று தகவல் சொன்னார். நான் ரவியிடம் பணம் கொடுத்தால் தான் வேலை ஆகும் என்று ஆஜர் எதிரி சொன்னதாக சொன்னேன். மேலும் விருப்பம் இருந்தால் கொடுங்கள் என்று சொல்லி ரவியை நல்லமநாயக்கன்பட்டிக்கு பணத்துடன் வரச்சொன்னேன். பணத்தினை நானும் ரவியும் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த ஆஜர் எதிரியிடம் ரூ. 15 ஆயிரத்தினை கொடுத்தோம். ஆஜர் எதிரி வீட்டிற்கு அடித்தளம் போடுங்கள் என்றும், அதைத்தொடர்ந்து உங்களுக்கு பணம் பஞ்சாயத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் சொன்னார். அசா 10 ன் இடத்தில் அவர்கள் வீடு கட்டுவதற்கான அடித்தளம் அமைத்துவிட்டார்கள். பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து ஒருவர் வந்து அடித்தளம் அமைத்ததை பார்த்து அளந்து சென்றார். அதனைத்தொடர்ந்து 20 நாட்களில் அசா 10 க்கான வேலை உத்தரவு ரத்தாகி விட்டது என்று அசா 10 ன் கணவர் ரவியிடம் பஞ்சாயத்து எழுத்தர் மாரிமுத்து சொன்னதாக எனக்கு தகவல் தெரிந்தது. நானும் ரவியும் சென்று ஆஜர் எதிரியை பார்த்து உத்தரவு ரத்தானது பற்றி கேட்டபோது அசா 10 க்கு ரேசன் கார்டு நல்லமநாயக்கன்பட்டியில் இல்லாததால் ரத்து ஆகிவிட்டதாக தெரிவித்தார். நாங்கள் கொடுத்த ரூ. 15 ஆயிரம் பணத்தினை ரவி ஆஜர் எதிரியிடம் கேட்டபோது ஆஜர் எதிரி யூனியன் ஆபிசிற்கு பணம் செலவாகிவிட்டது என்றும் கொடுக்கவேண்டிய நபர்களுக்கு

எல்லாம் கொடுத்துவிட்டேன் என்றும் சொன்னதாக என்னிடம் தெரிவித்தார். அசா 10 மாரியம்மாள் எதிரியிடம் கேட்டபோது அவரிடமும் மேற்கூறியவாறுதான் பதில் சொல்லியுள்ளார். நான் சென்று ஆஜர் எதிரியிடம் கேட்டபோது பணம் செலவாகிவிட்டது என்று சொல்லி உன்னால் ஆனதை பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டார். எனது அம்மா பணம் தொலைந்துபோனதாக நினைத்துக்கொள் என்று எனக்கு ஆறுதல் கூறினார். அசா 10 வுடன் சேர்த்து நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்தில் பசுமை வீடு திட்டத்தின் கீழ் 8 நபர்கள் பயனாளிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் 3 நபர்கள் பயனாளி பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார்கள். அதில் அசா 10 ம் ஒருவர் ஆவார். இது சம்பந்தமாக விருதுநகர் ஊ.த.க.பிரிவு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

எனது முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரியிடம் பசுமை வீடு கட்டுவது சம்பந்தமாக கேட்டபோது அவர் எங்களிடம் லஞ்சமாக பணம் கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதனை எனது மனைவியின் அக்கா கணவரிடம் சொன்னதாகவும், அதன்பின்னர் மாரியம்மாள் நகையை அடமானம் வைத்து எதிரியிடம் பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும் ரவியும் மேற்படி பணத்தினை எதிரியிடம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பின்னர் வேலைக்கான உத்தரவு ரத்தாகிவிட்டதால் எதிரியிடம் பணம் கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி மேற்படி தொகையை பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களுக்கு கொடுத்துவிட்டதாக சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் எனது அம்மாவிடம் சொன்னபோது பணம் தொலைந்துவிட்டதாக நினைத்துக்கொள் என்று சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தினை ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. ஆய்வாளர் என்னை விசாரிப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக எதிரி பணம் யூனியன் ஆபிஸ் அலுவலகத்தில் கொடுத்துவிட்டேன் என்று

சொன்னார் என்றால் ஞாபகம் இல்லை. எதிரி என்னிடம் கேட்டதாக சொல்லப்படும் ரூ. 15 ஆயிரம் கேட்ட தேதி, நாள், வருடம் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு எதிரியிடம் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி, நாள், வருடம் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. வீடு கட்டுவதற்கான அனுமதி வழங்கி எத்தனை நாட்களில் மேற்படி அனுமதி ரத்தானது என்றால் சுமார் 1 மாதத்தில் ரத்தானது. மாரியம்மாள் வழங்கப்பட்ட பயனாளி அனுமதியானது எதற்காக ரத்து செய்யப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. பசுமை வீடுகள் திட்டத்தின் பயனாளியாக அடையாளம் காணப்படும் நபர் அந்த கிராமத்தில் குடியிருப்பவராக இருக்கவேண்டும் என்றால் சரிதான். மாரியம்மாள் மேற்படி கிராமத்தில் குடியிருப்பில் இல்லை என்றால் சரிதான். யாரோ ஒருவர் கொடுத்த மனுவின் பேரில் தான் மாரியம்மாள் மற்றும் அவரைப்போன்று 3 நபர்களின் பயனாளி உதவி உத்தரவு ரத்து செய்யப்பட்ட விபரத்தை எனது சகலை எனக்கு கூறினார். ஊராட்சி அலுவலகத்தில் மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டதாக எனது சகலை சொன்னார். முதலிலேயே மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தால் பயனாளி உதவி குறித்த நடவடிக்கைகள் எடுத்திருக்கமாட்டோம் என்றால் சரிதான். பயனாளி நிதி உதவி கோருவதற்கு முன்பாகவே சாட்சி மாரியம்மாள் அந்த கிராமத்தில் வசிக்கவில்லை என்ற விபரத்தினை எதிரியிடம் தெரிவித்தேன் என்றால் சரிதான். எதிரி மேற்படி கிராமத்தில் நிலம் உரிமை சம்பந்தமாக பட்டா, அல்லது கிரையப்பத்திரம் இருந்தாலே போதும் என்று கூறினார், என்னிடம் மேற்படி வீடு கட்டும் இடத்திற்கான பட்டா இருந்தது என்றால் சரிதான். பயனாளி உதவி ரத்தான பிறகு நானோ, ரவியோ எதிரியின் மேல் அதிகாரிகளிடம் புகார் எதுவும் தெரிவித்தோமா என்றால் இல்லை.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.